பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 11

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 19

அல்லாஹ்வின் பேரழகுப் பெயர்கள் 23

1 அல்லாஹ் اللهُ
வணக்கத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் உரிய இறைவன் 25

2 அற்-றப்பு اَلرَّبُّ
படைத்து வளர்த்து பரிபாலிக்கும் இறைவன் 26

3,4 அற்-றஹ்மான், அற்-றஹீம் اَلرَّحْمَنُ الرَّحِيمُ
அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் 28

5,6 அல்-ஹய்யூ, அல்-கய்யூம் اَلْحَيُّ الْقَيُّومُ
என்றும் உயிருள்ளவன், என்றும் நிலையானவன் 29

7,8 அல்-காலிக், அல்-கல்லாக் الْخَالِقُ الخَلَّاقُ
படைப்பாளன், முன்மாதிரியின்றி படைப்பவன் 31

9,10 அல்-காலிக், அல்-பாரீ, அல்-முஸவ்விர்
الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ
அனைத்தையும் படைப்பவன், முன்மாதிரியின்றி
படைப்பவன், வடிவம் தருபவன் 33

11,12 அல்-மலிக், அல்-மலீக் اَلْمَلِكُ, المَلِيكُ
மன்னன் 35

13,14 அர்-ரஸ்ஸாக், அர்-ராஸிக் الرَّزَّاقُ الرَّازِقُ
வாழ்வாதாரம் வழங்குபவன் 37

15,16 அல்-அஹது, அல்-வாஹிது الْأَحَدُ الْوَاحِدُ
ஏகன், தனி ஒருவன் 40

17 அஸ்ஸமது الصَّمَدُ
தேவையற்றவன் 42

18 அல்-ஹாதீ الْهَادِي
நேர்வழி காட்டுபவன் 44

19 அல்-வஹ்ஹாபு الْوَهَّابُ
தாராளமாக வழங்குபவன் 46

20 அல்-ஃபத்தாஹ் الفَتَّاحُ
நியாயமாகத் தீர்ப்பளிப்பவன் 48

21 அஸ்-ஸமீஃ السَّمِيعُ
நன்கு செவியுறுபவன் 50

22 அல்-பஸீர் الْبَصِير
நன்கு பார்ப்பவன் 52

23 அல்-அலீம் الْعَلِيمُ
நன்கு அறிந்தவன் 54

24,25 அல்-லதீஃபு, அல்-கபீரு اللَّطِيفُ الْخَبِيرُ
மிகவும் நுட்பமானவன், அனைத்தையும் அறிந்தவன் 57

26,27 அல்-அஃபுவ்வு, அல்-கஃபூரு الْعَفُوُّ الْغَفُورُ
பிழைகளைப் பொறுப்பவன், பெரும் மன்னிப்பாளன் 59

28,29,30 அல்-அலிய்யு, அல்-அஃலா, அல்-முதஆல் الْعَلِيُّ الْأَعْلَى الْمُتَعَال
மிகவும் உயர்ந்தவன் 61

31,32 அல்-கபீரு, அல்-அளீமு الْكَبِيرُ الْعَظِيمُ
மிகவும் பெரியவன், மிகவும் மகத்தானவன் 63

33,34 அல்-கவிய்யு, அல்-மத்தீனு الْقَوِيُّ الْمَتِينُ
மிகவும் பலசாலி, வல்லமைமிக்கவன் 65

35,36 அஷ்-ஷஹீது, அர்-ரகீபு الشَّهِيدُ الرَّقِيبُ
அனைத்தையும் பார்ப்பவன், கண்காணிப்பவன் 67

37,38 அல்-முஹைமினு, அல்-முஹீத்து الْمُهَيْمِنُ الْمُحِيطُ
இரகசியங்களை அறிந்தவன்,
அனைத்தையும் சூழ்ந்தவன் 69

39 அல்-முகீத்து الْمُقِيتُ
பேராற்றலுடையவன் 71

40 அல்-வாஸிவு الْوَاسِعُ
தாராளமானவன் 73

41,42 அல்-ஹஃபீழ், அல்-ஹாஃபிழ் الْحَفِيظُ الْحَافِظُ
பாதுகாப்பவன் 75

43,44 அல்-வலிய்யு, அல்-மவ்லா الْوَلِي الْمَوْلَى
பாதுகாவலன், அதிபதி 77

45,46,47,48 அல்-அவ்வல், அல்-ஆகிர், அள்-ளாகிர்,
அல்-பாத்தின் الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ
ஆதியானவன், இறுதியானவன், வெளிப்படையானவன்,
மறைவானவன் 79

49 அல்-ஹகீம் الْحَكِيمُ
மிக்க ஞானம் நிறைந்தவன் 81

50 அல்-கனிய்யு الْغَنِيُّ
தன்னிறைவானவன் 83

51,52 அல்-கரீம், அல்-அக்ரம் الْكَرِيمُ الْأَكْرَمُ
மிக்க கண்ணியமானவன் 85

53 அஸ்-ஸலாம் السَّلَامُ
அமைதியளிப்பவன் 87

54,55 அல்-குத்தூஸ், அஸ்-ஸுப்பூஹ் الْقُدُّوسُ السُّبُّوحُ
மிகவும் தூயவன் 88

56 அல்-ஹமீது الْحَمِيدُ
மிக்க புகழுக்குரியவன் 91

57 அல்-மஜீது الْمَجِيدُ
மிக்க மகத்துவமானவன் 93

58,59 அஷ்-ஷுக்கூர், அஷ்-ஷாகிர் الشَّكُورُ الشَّاكِرُ
மிக்க நன்றி பாராட்டுபவன்,
நன்றியை அங்கீகரிப்பவன் 95

60 அல்-ஹலீம் الْحَلِيمُ
மிக்க சகிப்புத்தன்மை கொண்டவன் 97

61,62 அல்-ஹக்கு, அல்-முபீன் الْحَقُّ الْمُبِينُ
உண்மையான இறைவன், தெளிவாக்குபவன் 100

63,64,65 அல்-கதீரு, அல்-காதிரு, அல்-முக்ததிரு
الْقَدِيرُ الْقَادِرُ الْمُقْتَدِرُ
பேராற்றல்மிக்கவன் 103

66 அல்-வதூது الْوَدُودُ
மிக்க அன்பாளன் 106

67 அல்-பர்ரு الْبَرُّ
பெரும் உபகாரம் செய்பவன் 108

68 அற்-றஊஃப் الرَّءُوفُ
மிக்க இரக்கமுடையவன் 110

69,70 அல்-ஹஸீப், அல்-காஃபீ الحَسِيبُ اَلْكَافِي
துல்லியமாகக் கணக்கெடுப்பவன்,
அடியார்களுக்குப் போதுமானவன் 112

71,72 அல்-கஃபீல், அல்-வகீல் الْكَفِيلُ الْوَكِيلُ
பொறுப்பேற்பவன் 114

73,74 அல்-காலிப், அந்-நஸீர் الْغَالِبُ النَّصِيرُ
மேலோங்கியவன், மிகவும் உதவக்கூடியவன் 116

75 அல்-அஸீஸ் الْعَزِيزُ
மிகவும் கண்ணியவான், மிகைத்தவன் 119

76 அல்-ஜப்பார் الْجَبَّارُ
அடக்கியாள்பவன் 121

77 அல்-கரீபு الْقَرِيبُ
மிக அருகில் இருப்பவன் 123

78 அல்-முஜீபு الْمُجِيبُ
பிரார்த்தனைக்குப் பதிலளிப்பவன் 126

79,80 அல்-காஹிர், அல்-கஹ்ஹார் الْقَاهِرُ الْقَهَّارُ
ஆதிக்கம் செலுத்துபவன் 128

81 அல்-வாரிஸ் الْوَارِثُ
அனைத்துக்கும் உரிமையாளன் 131

82 அல்-முதகப்பிர் الْمُتَكَبِّرُ
மகிமை மிக்கவன் 134

83 அல்-மு்மின் الْمُؤْمِنُ
உண்மைப்படுத்துபவன் 136

84 அஸ்-ஸாதிக் الصَّادِقُ
உண்மையாளன் 139

85 அந்-நூர் النُّورُ
ஒளியானவன் 142

86 அல்-முஹ்ஸின் الْمُحْسِنُ
உபகாரம் செய்பவன் 145

87 அத்-தய்யான் الدَّيَّانُ
விசாரித்து கூலி வழங்குபவன் 147

88,89 அல்-முகத்திம், அல்-முஅஹ்ஹர் الْمُؤَخِّرُ الْمُقَدِّمُ
முற்படுத்துபவன், பிற்படுத்துபவன் 150

90 அத்-தய்யிபு الطَّيِّبُ
மிகத் தூய்மையானவன் 153

91 அஷ்-ஷா்பீ الشَّافِي
நிவாரணம் அளிப்பவன் 156

92 அல்-ஜமீல் الْجَمِيلُ
மிக அழகானவன் 158

93,94 அல்-காபிழ், அல்-பாஸித் الْقَابِضُ الْبَاسِطُ
நெருக்கடியாக்குகிறவன்,
விசாலமாய் வழங்குபவன் 160

95 அல்-மன்னான் الْمَنَّانُ
தொடர்ந்து வழங்கிக்கொண்டிருப்பவன் 163

96 அல்-ஹய்யூ الْحَيُّ
வெட்கப்படுபவன் 165

97 அஸ்-ஸத்தீர் السَّتِّيرُ
அடியார்களின் குறைகளை மறைப்பவன் 168

98 அஸ்-ஸய்யித் السَّيِّدُ
இணையற்ற தலைவன் 171

99 அர்-ரஃபீக் الرَّفِيقُ
மென்மையானவன் 173

100 அல்-வித்ர் الْوِتْرُ
ஒற்றையானவன் 175

101,102 அல்-முஃதீ, அல்-ஜவ்வாது الْمُعْطِي الْجَوَادُ
வழங்குவதில் தனித்துவமானவன்,
பெரும் கொடையாளன் 177

103 துல்ஜலால் வல்இக்ராம் ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ
கண்ணியமும் மகிமையும் மிக்கவன் 180

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

❀

பெயரும் பிறப்பும்

ஷெய்க் அப்துற் றஸ்ஸாக் இப்னு அப்துல் முஹ்சின் அல்அப்பாது அல்பத்ர் அவர்களின் இயற்பெயர், அப்துற் றஸ்ஸாக். தந்தை பெயர் அப்துல் முஹ்சின். அல்அப்பாது என்பது இவர்களின் முப்பாட்டனார் அப்துல்லாஹ் இப்னு ஹம்து அவர்களுக்கு வழங்கப் பட்டுவந்த அடைமொழியாகும். அல்பத்ர் என்பது குடும்பப் பெயராகும். இக்குடும்பம் அல்அனானிய்யா குலங்களில் ஒன்றான உத்ரா குலத்தைச் சேர்ந்ததாகும். சுலைமான் இப்னு அப்துல்லாஹ் ஆலு பத்ர் அவர்களின் மகள்தான் ஷெய்க்கின் பாட்டி.

ஹிஜ்ரீ 1382 துல் கஅதா பிறை 22 (கி.பி. 1963 ஏப்ரல் 16) அன்று சஊதி அறேபியாவின் ரியாழ் நகருக்கு வடக்கே முந்நூறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஸுல்ஃபீ எனும் கிராமத்தில் ஷெய்க் பிறந்தார்கள். தனது தந்தையின் சீரான வளர்ப்பில் அங்குள்ள கல்விக்கூடம் ஒன்றில் அடிப்படைக் கல்விகளைக் கற்றார்கள். ஷெய்க்கின் தந்தை அப்துல் முஹ்சின் அவர்கள் ஹதீஸ் துறை மேதைகளில் ஒருவர். அறபுலக அறிஞர்கள் அனைவராலும் பெரி தும் மதிக்கப்படும் மூத்த கல்வியாளர். தொடர்ந்து மதீனாவில் மஸ்ஜிதுந் நபவீயின் கல்வி அமர்வுகளில் பாடங்கள் நடத்திவருபவர்.

கல்வித்தகுதி

ஷெய்க் அவர்கள் அகீதா எனும் கொள்கைகளைப்பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். அத்துடன், பின்வரும் மூத்த அறிஞர்களிடமும் கல்வி கற்றுள்ளார்கள்.

- அல்அல்லாமா ஷெய்க் அப்துல் முஹ்சின் அல்அப்பாது
- அல்அல்லாமா ஷெய்க் அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் ﵀
- அல்அல்லாமா ஷெய்க் முஹம்மது ஸாலிஹ் உஸைமீன் ﵀
- அல்அல்லாமா ஷெய்க் முஹம்மது நாசிருத்தீன் அல்பானீ ﵀

- ஷெய்க் அலீ நாசிர் ஃபகீஹீ
- ஷெய்க் அப்துல்லாஹ் அல்குனைமான்

கல்விப்பணிகள்

ஷெய்க் அவர்கள் தற்சமயம் மதீனாவிலுள்ள அல்ஜாமிஆ அல் இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்துவருகிறார்கள். அத்துடன், பல்வேறு தொகுப்புகளையும் விரிவுரைகளையும் எழுதியுள்ளார்கள். அவற்றில் சில:

1. ஃபிக்ஹுல் அத்இயத்தி வல் அத்காா் (فقه الأدعية والأذكار) – துஆக்கள் மற்றும் திக்ர்கள் பற்றிய விளக்கம்

2. அல்ஹஜ்ஜு வ தஹ்தீபுன் நஃப்ஸ் (الحج وتهذيب النفوس) – ஹஜ்ஜும் மனதை பக்குவப்படுத்துதலும்

3. தத்கிரத்துல் முஅத்தீ (تذكرة المؤتي شرح عقيدة عبد الغني المقدسي) – அல்லாஹ்வைப் பற்றிய கொள்கை விளக்க நூல்

4. ஷரஹ் ஹாஷியத்து அபீ தாவூத் (شرح حاشية أبي داود) – அபூதாவூது என்ற நபிமொழித் தொகுப்பின் விரிவுரை

5. திராசத்து லி அஸரி மாலிக் ஃபில் இஸ்திவாயீ (دراسة لأثر مالك في الاستواء) – அல்லாஹ் உயர்ந்துவிட்டான் என்பது பற்றிய விளக்கநூல்

ஒலி வடிவ பதிப்புகள்

1. ஷரஹ் அல் கவாயிதுல் முஸ்லா (شرح القواعد المثلى) – இமாம் முஹம்மது ஸாலிஹ் அல்உஸைமீன் ﵀ எழுதிய அல்லாஹ்வைப் பற்றிய கொள்கையின் விதிகள் ஒரு விளக்கம்

2. ஷரஹ் அல்கலிமுத் தய்யிப் (شرح الكلم الطيب) – இமாம் இப்னு தைமிய்யா ﵀ தொகுத்தளித்த பரிசுத்தப் பிரார்த்தனைகள் ஒரு விளக்கம்

3. ஷரஹ் கவாயிது அல்அஸ்மா உல் ஹுஸ்னா (شرح قواعد الأسماء الحسنى لابن القيم) – அல்லாஹ்வின் அழகிய பெயர்களுக்கான அடிப்படைச் சட்ட விளக்கங்கள்

4. ஷரஹ் ஹாஷியத்து அபீதாவூத் (شرح الحاشية لأبن أبي داود) – அபூதாவூது என்ற நபிமொழித் தொகுப்பின் விரிவுரை

5. ஷரஹ் அகீதத்து அப்துல் கனீ அல் மக்தஸீ (شرح عقيدة عبد الغني المقدسي) – இமாம் அப்துல் கனீ அல்மக்தஸீ ﷺ அவர்களின் கொள்கை விளக்கம்

6. ஷரஹ் அல்வாசித்தியய்யா (شرح الواسطية لابن تيمية في مسجد الجامع) – இப்னு தைமிய்யா ﷺ அவர்கள் வாசித்தியய்யா மக்களுக்கு எழுதிய கொள்கை விளக்கம்

7. ஷரஹ் அகீதத்துத் தஹாவியய்யா (شرح العقيدة الطحاوية) – இமாம் தஹாவீ ﷺ அவர்களின் கொள்கை விளக்கம்

வலைதள மின்னூல்கள்

1. ஷரஹ் காமில் அலா கிதாபில் அதபில் முஃப்ரத் லி இமாமில் புகாரீ (شرح كامل على كتاب الأدب المفرد للإمام البخاري)

2. ஷரஹ் கிதாபுல் ஃபுஸூல் ஃபீ சீரத்திர் ரசூல் லி இப்னில் கஸீர் (شرح كتاب الفصول في سيرة الرسول لابن كثير)

மற்றும் பல. ஷெய்க் அவர்களின் கல்வியால் பயனடைய பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும்: http://www.al-badr.net/web/intex.php

1

அல்லாஹ் الله

வணக்கத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் உரிய இறைவன்

❀

இது அல்லாஹ்வின் அழகிய பெயர்களில் மகத்தானதாகும். அவனுடைய பெயர்களிலே குர்ஆனில் அதிகம் வந்துள்ளது இதுதான். கிட்டத்தட்ட ஆயிரத்து இருநூறுக்கு மேற்பட்ட இடங்களில் இது வந்துள்ளது. முப்பத்து மூன்று வசனங்களை அவன் இப்பெயரைக் கொண்டே தொடங்கியுள்ளான். அறிஞர்களில் ஒரு பிரிவினர் இது அல்லாஹ்வின் மகத்தான பெயர்களில் ஒன்றாகும் என்று கூறுகிறார்கள். இந்தப் பெயரைக் கொண்டு பிரார்த்தித்தால் அங்கீகரிக்கப்படும்; கேட்டால் வழங்கப்படும். இந்த பெயருக்கென்று சில தனித்தன்மைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று இது மற்ற பெயர்கள் அனைத்திற்குமான மூலமாகும். மற்ற பெயர்கள் அனைத்தும் இதன் பக்கமே இணைக்கப்படுகின்றன. அல்லாஹ் கூறுகிறான்:

وَلِلَّهِ الْأَسْمَاءُ الْحُسْنَىٰ فَادْعُوهُ بِهَا

'அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் இருக்கின்றன. எனவே அவற்றைக் கொண்டே அவனை அழையுங்கள்.' (குர்ஆன் 7:180)

இது மற்ற பெயர்கள் அனைத்தின் சுருக்கமாகும். மற்றவை இதன் விளக்கமாகவே இருக்கின்றன. இதுவே அல்லாஹ்வின் பெயர்கள் அனைத்திற்கும் அவற்றின் விளக்கங்களுக்கும் மையப்புள்ளியாகும். இதுகுறித்து கூறப்பட்டுள்ள கூற்றுகளில் இப்னு அப்பாஸின் பின்வரும் கூற்றே மிகச் சிறந்ததாகும்: 'அவனே படைப்புகள் அனைத்திற்கும் வணக்கத்திற்கு உரியவன்.' (இப்னு ஜரீர்) கண்ணியம், பரிபூரணத்துவம், மகத்துவம் ஆகிய பண்புகளுக்கு உரிய அவனே வணக்கத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் உரியவன்.

7,8

அல்-காலிக், அல்-கல்லாக் الْخَالِقُ الْخَلَّاقُ

படைப்பாளன், முன்மாதிரியின்றி படைப்பவன்

❀

الْخَالِق – (அல்-காலிக்) படைப்பாளன் என்ற பெயர் குர்ஆனில் பல இடங்களில் இடம்பெற்றுள்ளது. அவற்றுள் ஒன்று,

هُوَ اللَّهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ الْأَسْمَاءُ الْحُسْنَىٰ يُسَبِّحُ لَهُ مَا فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ

அவனே எல்லா படைப்புகளையும் படைத்தவன்; படைப்புகளை முன்மாதிரியின்றி படைத்தவன்; தன் படைப்புகளுக்கு தான் விரும்பிய வடிவம் அளிப்பவன்; உயர்ந்த பண்புகளை உள்ள டக்கிய அழகிய பெயர்கள் அவனுக்கே உரியன. வானங்களிலும் பூமியிலும் உள்ள ஒவ்வொன்றும் குறைகள் அனைத்தையும் விட்டு அவனைத் தூய்மைப்படுத்துகின்றன. அவன் யாவற்றை யும் மிகைத்தவன்; ஞானமிக்கவன். (குர்ஆன் 59:24)

الخلاق (அல்-கல்லாக்) என்ற பெயர் குர்ஆனில் இரு இடங்களில் இடம்பெற்றுள்ளது. الخلق (அல்-கல்க்) என்ற வார்த்தை அறபி மொழியில் இரு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது.

1. ஒரு பொருளை முன்மாதிரியின்றி படைத்தல், உருவாக்குதல். எடுத்துக்காட்டாகப் பின்வரும் வசனம்:

أَوَلَمْ يَرَوْا أَنَّا خَلَقْنَا لَهُمْ مِمَّا عَمِلَتْ أَيْدِينَا أَنْعَامًا فَهُمْ لَهَا مَالِكُونَ

நாம் அவர்களுக்காக கால்நடைகளைப் படைத்துள்ளோம் என் பதை அவர்கள் பார்க்கவில்லையா? அவர்கள் அந்த கால்நடை களுக்கு உரிமையாளர்களாக இருக்கிறார்கள். தங்களின் நலன் களுக்காக அவற்றைப் பயன்படுத்துகிறார்கள். (குர்ஆன் 36:71)

2. நிர்ணயித்தல், எண்ணுதல்.

الخلق (அல்-கல்க்) என்ற வார்த்தை மனிதர்களின் பண்பாக குறிப்பிடப் படும்போது 'நிர்ணயித்தல்' என்ற பொருளில்தான் பயன்படுத்தப் படுகிறது. முன்மாதிரியின்றி படைக்கும் பண்பு அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது. உதாரணமாக இந்த வசனத்தைக் கவனியுங்கள்:

هَذَا خَلْقُ اللَّهِ فَأَرُونِي مَاذَا خَلَقَ الَّذِينَ مِنْ دُونِهِ بَلِ الظَّالِمُونَ فِي ضَلَالٍ مُبِينٍ

இவையனைத்தும் அல்லாஹ்வின் படைப்புகளாகும். இணை வைப்பாளர்களே! அவனைத் தவிர நீங்கள் வணங்கும் தெய்வங் கள் எதைப் படைத்தன என்பதை எனக்குக் காட்டுங்கள். மாறாக, எதையும் படைக்காதவற்றை அல்லாஹ்வுக்கு இணையாக்கி அநியாயக்காரர்கள் சத்தியத்தைவிட்டும் தெளிவான வழிகேட்டில் வீழ்ந்துவிட்டார்கள். (குர்ஆன் 31:11)

அல்லாஹ் இந்த படைப்புகள் அனைத்தையும் வீணாக நோக்கமின்றி படைக்கவில்லை. அவ்வாறு படைப்பதைவிட்டும் அவன் தூய்மை யானவன். மாறாக, அவர்கள் அனைவரையும் அவன் தன்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளான்.

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ فَتَعَالَى اللَّهُ الْمَلِكُ الْحَقُّ لَا إِلَهَ إِلَّا هُوَ رَبُّ الْعَرْشِ الْكَرِيمِ

நாம் உங்களை வீணாகப் படைத்துள்ளோம், நீங்கள் நம் பக்கம் திரும்பிவர மாட்டீர்கள் என்று எண்ணிக் கொண்டீர்களா? உண்மையான அரசனாகிய அல்லாஹ் மிக உயர்ந்தவன். அவ னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை. அவன் கண்ணியமிக்க அர்ஷின் அதிபதியாக இருக்கின்றான். (குர்ஆன் 23:114,115)

26,27

அல்-அஃபுவ்வு, அல்-கஃபூரு الْعَفُوُّ الْغَفُورُ

பிழைகளைப் பொறுப்பவன், பெரும் மன்னிப்பாளன்

❀

அல்லாஹ் கூறுகிறான்:

ذَٰلِكَ وَمَنْ عَاقَبَ بِمِثْلِ مَا عُوقِبَ بِهِ ثُمَّ بُغِيَ عَلَيْهِ لَيَنْصُرَنَّهُ اللَّهُ إِنَّ اللَّهَ لَعَفُوٌّ غَفُورٌ

யார் தாம் துன்புறுத்தப்பட்டதுபோலவே பழிவாங்கி பின்னர் அவர்மீது அநீதி இழைக்கப்படுமானால் நிச்சயம் அல்லாஹ் அவருக்கு உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் பிழைகளைப் பொறுப்பவனாகவும் பெரும் மன்னிப்பாளனாகவும் இருக்கின்றான். (குர்ஆன் 22:60)

فَأُولَٰئِكَ عَسَى اللَّهُ أَنْ يَعْفُوَ عَنْهُمْ وَكَانَ اللَّهُ عَفُوًّا غَفُورًا

அவர்களை அல்லாஹ் மன்னித்துவிடக்கூடும். அவன் பிழைகளைப் பொறுப்பவனாகவும் பெரும் மன்னிப்பாளனாகவும் இருக்கின்றான். (குர்ஆன் 4:99)

அல்-அஃபுவ்வுன்: அவன் பாவங்களை அழித்துவிடுகிறான். கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறான். இது கிட்டத்தட்ட 'கஃபூர்' என்ற வார்த்தைக்கு மிகவும் நெருக்கமானது. ஆனால் அதைவிட ஆழமான பொருளைத் தரக்கூடியது. ஏனெனில், கஃபூர் என்ற வார்த்தை பாவங்களை மறைத்துவிடுதல் என்ற பொருள் தரக்கூடியது. அல்-அஃபுவ்வு என்ற வார்த்தையைப் பாவங்களை அழித்து இல்லாமல் ஆக்குதல் என்ற பொருளைத் தரக்கூடியதாகும்.

அஃபுவ்வின் இரண்டு வகைகள்

முதல் வகை: இது நிராகரிப்பாளர்கள் மற்றும் மற்றவர்களிலுள்ள குற்றவாளிகள் அனைவருக்கும் பொதுவானது. அவர்கள் இணை

வைப்பு மற்றும் இன்னபிற பாவங்களில் ஈடுபட்டபோதிலும் அல்லாஹ் அவர்களைத் தண்டிக்காமல் அருட்கொடைகளை வழங்குகிறான். அவர்களுக்காக உலகியல் வசதிகளை ஏற்படுத்தியுள்ளான். இது அவனது சகிப்புத் தன்மையின் வெளிப்பாடு ஆகும்.

இரண்டாவது வகை: இது தனித்துவமிக்க மன்னிப்பு. தன் பக்கம் மீண்டு பாவமன்னிப்புக் கோரக்கூடியவர்களுக்கு அவன் வழங்குகிறான். பாவங்களில் நிலைத்திருக்காமல் தூய உள்ளத்துடன் பாவமன்னிப்புக் கோரும் அடியார்களுக்கு அவன் வழங்குகிறான். அடியார்கள் தூய உள்ளத்துடன் பாவமன்னிப்புக் கோரினால் அவர்கள் செய்த பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னித்து விடுகிறான். பின்வரும் வசனமே அதற்கான சான்றாகும்:

قُلْ يَا عِبَادِيَ الَّذِينَ أَسْرَفُوا عَلَىٰ أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا مِن رَّحْمَةِ اللَّهِ إِنَّ اللَّهَ يَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا إِنَّهُ هُوَ الْغَفُورُ الرَّحِيمُ

நீர் கூறுவிராக: 'தமக்குத் தாமே தீங்கிழைத்துக்கொண்ட என் அடியார்களே! அல்லாஹ்வின் கருணையில் நம்பிக்கை இழந்து விடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னித்துவிடுவான். அவன் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையாளனாகவும் இருக்கின்றான்.' (39:53)

அவன் மன்னிப்பு என்னும் வாசலைத் திறந்தே வைத்துள்ளான். அவன் எப்போதும் பாவங்களை மறைக்கக்கூடியவனாகவும் மன்னிப்பவனாகவுமே இருப்பான். இது அவனது வாக்குறுதியாகும்.

وَإِنِّي لَغَفَّارٌ لِّمَن تَابَ وَآمَنَ وَعَمِلَ صَالِحًا ثُمَّ اهْتَدَىٰ

நிச்சயமாக என் பக்கம் திரும்பி நம்பிக்கைகொண்டு நற்செயல் புரிந்து பின்னர் நேர்வழிபெற்றவர்களை நான் மன்னிக்கக் கூடியவனாக இருக்கின்றேன். (குர்ஆன் 20:82)

100

அல்-வித்ர் الْوِتْرُ

ஒற்றையானவன்



இதுவும் நபிமொழிகளின் மூலமே உறுதியாகிறது. நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ؓ கூறுகிறார்:

لِلَّهِ تِسْعَةٌ وَتِسْعُونَ اسْمًا، مِائَةٌ إِلَّا وَاحِدًا، لاَ يَحْفَظُهَا أَحَدٌ إِلَّا دَخَلَ الجَنَّةَ، وَهُوَ وَتْرٌ يُحِبُّ الوَتْرَ

'அல்லாஹ்வுக்கு தொண்ணூற்று ஒன்பது பெயர்கள் இருக்கின்றன. அவற்றைப் பேணியவர் சுவனத்தில் நுழைந்துவிடுவார். அவன் ஒற்றையானவன். ஒற்றைப்படையை விரும்பக்கூடியவன்.' (புகாரீ 6047, முஸ்லிம் 6985)

அல்-வித்ர் என்றால் அவன் தனித்தவன், அவனுக்கு யாதோர் இணையுமில்லை என்று பொருள். இது அவனது ஏகத்துவத்தை அறிவிக்கக்கூடிய பெயர்களில் ஒன்றாகும். அவனுக்கு இணையான யாரும் எதுவும் இல்லை. திருக்குர்ஆனில் இதுகுறித்து ஏராளமான வசனங்கள் வந்துள்ளன.

அல்லாஹ் தனித்தவன் என்று நம்புவது எந்த வகையிலும் அவனுக்கு இணையாக யாரும் இல்லை என்றும் அவனே இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் படைத்தவன், பராமரிக்கக் கூடியவன், நிர்வகிக்கக்கூடியவன் என்றும் நம்புவதாகும்.

இவ்வாறு ஏற்றுக்கொள்வது கட்டுப்படுதல், நேசித்தல், வணங்குதல், சார்ந்திருத்தல் ஆகியவற்றை அவனுக்கு மட்டுமே உரித்தாக்க வேண்டும் என்பதைக் கடமையாக்குகின்றது.

அபுல் அப்பாஸ் குர்துபீ ؒ கூறுகிறார்: 'வித்ர் என்றால் ஏகத்துவம் என்றுதான் பொருள். நிச்சயமாக அல்லாஹ் தன் உள்ளமையில்,

பண்புகளில், செயல்களில் தனித்தவன் என்று பொருள். அவன் ஏகத்துவத்தையே விரும்புகிறான். அவன் முதலாவதாகக் கூறுவது ஏகத்துவத்தைத்தான். இறுதியாகக் கூறுவதும் ஏகத்துவத்தைத்தான்.

இணைவைப்பாளர்கள் ஏற்படுத்தும் பரிந்துரையாளர்கள் அவர்களுக்குப் பலனளிக்கவோ தீங்கிழைக்கவோ சக்திபெறமாட்டார்கள் என்று குர்ஆன் தெளிவாக எடுத்துரைக்கிறது. அல்லாஹ் கூறுகிறான்:

وَيَعْبُدُونَ مِنْ دُونِ اللَّهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ وَيَقُولُونَ هَؤُلَاءِ شُفَعَاؤُنَا عِنْدَ اللَّهِ قُلْ أَتُنَبِّئُونَ اللَّهَ بِمَا لَا يَعْلَمُ فِي السَّمَاوَاتِ وَلَا فِي الْأَرْضِ سُبْحَانَهُ وَتَعَالَى عَمَّا يُشْرِكُونَ

‘இணைவைப்பாளர்கள் அல்லாஹ்வைவிடுத்து தங்களுக்கு பலனளிக்கவோ தீங்கிழைக்கவோ முடியாத பொய்யான கடவுள்களை வணங்குகிறார்கள். உண்மையான இறைவனால் மட்டுமே தான் நாடியபோது பலனளிக்கவோ தீங்கிழைக்கவோ முடியும். அவர்கள் தங்களின் தெய்வங்களைக் குறித்துக் கூறுகிறார்கள்: ‘இவை அல்லாஹ்விடத்தில் எங்களுக்காகப் பரிந்துரை செய்யும். அதனால் அவன் எங்களின் பாவங்களினால் எங்களைத் தண்டிக்க மாட்டான்.’ தூதரே! நீர் அவர்களிடம் கேட்பீராக: ‘அனைத்தையும் அறிந்த அல்லாஹ்வுக்கு இணை உண்டு என்று அவனிடம் கூறுகிறீர்களா? வானங்களிலும் பூமியிலும் தனக்கு இணை உண்டு என்பதை அவன் அறியவில்லையா? இணைவைப்பாளர்கள் கூறும் பொய்களையும் புனைவுகளையும் விட்டு அவன் பரிசுத்தமானவன்.’ *(குர்ஆன் 10:18)*

பரிந்துரையாளர்களை ஏற்படுத்தக்கூடியவர்கள் இணைவைப்பாளர்களே. அவர்களின் பரிந்துரையால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. அவர்கள் பரிந்துரைக்கப் போவதுமில்லை. அவர்கள் யாரை பரிந்துரையாளர்கள் என்று கருதுகிறார்களோ அவர்களே தங்களுக்கு இறைநெருக்கத்தையும் திருப்தியையையும் தேடிக் கொண்டிருப்பார்கள்.